# ஈ-கார்கோ பைக்குகள்

நெரிசலைக் குறைப்பதற்கும், வாயுக்களின் உமிழ்வைக் குறைப்பதற்கும் ஒரு புதிய முயற்சியின் ஒரு பகுதியாக மில்டன் கீன்ஸின் தெருக்களில் மின்-சரக்கு பைக்குகள் வந்திருக்கின்றன.

மில்டன் கீன்ஸ் கவுன்சில் நகரம் முழுவதும் விநியோகங்கள் செய்யப்படும் வழிகளை மேம்படுத்த தனது வாகனப்படைக்கு மின்-சரக்கு பைக்குகளை அறிமுகப்படுத்துகிறது.

புதிய பைக்குகள் மில்டன் கீன்ஸ் முழுவதும் விநியோகிக்கும் வணிகங்களை ஆதரிக்க பயன்படுத்தப்படும். மேலும் இந்த நிலையான மாற்றீட்டை வழங்குவதன் மூலம் கார்கள் மற்றும் வேன்களை சார்வதை குறைப்பதே இதன் நோக்கம் ஆகும்.

கவுன்சிலின் மரம் மற்றும் நெடுஞ்சாலை ஆய்வாளர்கள் தங்கள் விசாரணைகளுக்காக பெருநகரத்தை சுற்றி வருவதற்கு வழிவகுக்கும்படி பல பைக்குகள் பயன்படுத்தப்படும். கெட் ஸ்மார்ட்டர் வணிக பயண முதல்முயற்சியின் ஒரு பகுதியாக உள்ளூர் வணிகங்களுக்கும் குத்தகைக்கு  இந்த வாகனப்படை கிடைக்கும்.

# வணிகத்திற்கான ஈ-கார்கோ பைக்குகள்

மில்டன் கீன்ஸ் முழுவதிலும் உள்ள வணிகங்கள், நகரமெங்கும் விநியோகங்களைச் செய்வதற்கான புதிய வழியைக் ஏற்றுக்கொண்டு சோதனையிட ஊக்குவிக்கப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள், கவுன்சில் ஒரு புதிய மின்-சரக்கு பைக் குத்தகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தும், மேலும் 13 பைக்குகள் வணிகங்களுக்கு குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் பெரிதும் குறைக்கப்பட்ட விகிதத்தில் கடனாக பெறக் கிடைக்கும்.

630 லிட்டர் வரை சுமைகளைச் சுமக்கும் திறன் கொண்ட இந்த பைக்குகள், பெரும்பாலான உள்ளூர் பயணங்களுக்கு கார்கள் அல்லது வேன்களுக்கு பதிலாக உபயோகப்படுத்த முடியும், மேலும் அவை முதல் மற்றும் கடைசி மைல் விநியோகங்களுக்கு ஏற்றவை.

உங்கள் வணிகம், நகரம் முழுவதும் விநியோகங்களை மேற்கொண்டால், போக்குவரத்து உமிழ்வைக் குறைப்பதிலும், மில்டன் கீன்ஸை வாழ்வதற்கும் வேலை செய்வதற்கும் ஒரு பசுமையான இடமாக மாற்றுவதில் உங்கள் பங்கை உங்களால் செய்ய முடியுமா?

## ஈ-கார்கோ பைக்குகளின் நன்மைகள்

- எரிபொருள் மற்றும் வாகன செலவில் பணத்தை சேமிக்கும்
- வாகன நிறுத்த  கட்டணம் இனி இல்லை
- போக்குவரத்து உமிழ்வைக் குறைக்கும்
- போக்குவரத்து வரிசைகளைத் தவிர்க்கும்
- ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான ஊழியர்கள்
- பதவி உயர்வு (பைக்குகளுக்கு பெயரிடப்படலாம்)
- ஒரு முன்னோடியாக இருங்கள்!

ஈ-கார்கோ பைக் கிராண்ட் நிதி திட்டத்திற்கு போக்குவரத்துத் துறை நிதியளித்து எரிசக்தி சேமிப்பு அறக்கட்டளையால் வழங்கப்படுகின்றது.

# ஈ-கார்கோ பைக் உங்கள் வணிகத்திற்கு சிறந்ததாக இருக்க 10 காரணங்கள்

## ஈ-கார்கோ பைக்குகள்: நகர்ப்புற விநியோகங்களின் எதிர்காலம்

ஏற்கனவே நெரிசலால் சுமையேற்றப்பட்டுள்ள எங்கள் சாலைகளில் வீட்டு விநியோகங்களில் அதிகரிப்பு சமீபத்தில் ஏற்பட்டுள்ளதால், வணிகங்கள் நகரத்தை சுற்றி பொருட்களை அனுப்புவதற்கு  மிகவும் வசதியான மற்றும் நிலையான வழிகளைத் தேடுகின்றன.  மின்சார இயந்திரத்துடன் உள்ள  மின்-சரக்கு பைக்குகள், வீட்டிலிருந்து வீட்டுக்கு 360 லிட்டர் வரை சுமைகளை சுமக்க திறன் கொண்டவை , இதற்கு  பதிலாக இருக்க முடியும்.

மில்டன் கீன்ஸ் தங்கள் புதிய மின்-சரக்கு பைக்குகளை வணிகத் திட்டத்திற்காக அறிமுகப்படுத்தும்போது, இந்த புதிய விநியோக முறையின் அநேக வணிக நன்மைகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

1.**மின்-சரக்கு பைக்குகள் செலவு குறைந்தவை**: மின் சரக்கு பைக்குகளுக்காக உங்கள் கார்கள் அல்லது வேன்களை ஒதுக்கிவிட்டால் எரிபொருள், பராமரிப்பு, வரி மற்றும் காப்பீட்டில் எவ்வளவு நீங்கள் சேமிக்க முடியும் என்பதைக் கவனியுங்கள்.

மில்டன் கீன்ஸ் கவுன்சிலின் புதிய மின்-சரக்கு பைக் கடன் திட்டத்தினால், வணிகங்கள் வாங்குவதற்கு முன், ஆராய்ந்து உபயோகித்து  பார்ப்பதற்கான வாய்ப்பைப் பெறுகின்றன. எங்கள் குறைந்த செலவு, குறுகிய மற்றும் நீண்ட கால வாடகை திட்டம் என்பது ஒரு சோதனையை செய்வதற்கும் அது உங்களுக்காக வேலைசெய்கிறதா என்று பார்ப்பதற்கும் , முன் முதலீடு எதுவும் தேவையில்லை என்பதாகும்.

2.**சுற்றி வர ஒரு வசதியான வழி**: ஒரு மின் -சரக்கு பைக் ஓட்டுபவர் மற்ற விநியோக வகைகளுடன் ஒப்பிடும்போது குறைந்த நேரத்தில் எளிதாக தங்கள் இடத்தை அடைய முடியும். உங்கள் இலக்கை அடைய போக்குவரத்து வரிசையில் காத்திருப்பது கடந்த காலத்தின் ஒரு விஷயம். நகர போக்குவரத்தை சமாளிக்க பைக்குகள் சிறப்பாக பொருத்தப்பட்டுள்ளன, மேலும் பொருட்களை அனுப்புவதற்கான  சிறந்த வழி வேறு எதுவுமில்லை.

3.**நிறுத்த இடத்தைத்  இனி தேட தேவையில்லை**: நிறுத்த வசதியான இடத்தைத் தேடும் விலையுயர்ந்த உங்கள் நேரத்தை மிச்சப்படுத்துங்கள். ஒரு மின் -சரக்கு பைக்கை வீடு வீடாக ஓட்டலாம், இதிலிருந்து ஒரு கார் அல்லது வேனை விட எளிதாகவும் விரைவாகவும் பொருட்களை இறக்க முடியும்.

4. **பெரிய ஏற்றுதல் திறன்**: எங்கள் மின்-சரக்கு பைக்குகள் 630 லிட்டர் வரை சுமைகளை சுமக்கக்கூடும், எனவே பெரும்பாலான உள்ளூர் விநியோகங்களுக்கு கார்கள் மற்றும் வேன்களுக்கு பதிலாக இதை உபயோகிக்க முடியும். மின் இயந்திரம் என்பது சாதாரண பைக்கை விட அதிக சுமைகளை சுமப்பது கூட மிகவும் எளிதானது ஆகும்.

5. **வாயு உமிழ்வு அன்றி இருங்கள்**: மின்-சரக்கு பைக்குகள் கார்பன் டை ஆக்சைடு ஐ வெளியிடுவதில்லை, எனவே நகரத்தை சுற்றி பொருட்களை நகர்த்துவதற்கான சுற்றுச்சூழல் - நட்பு வகையானது இது. மில்டன் கீன்ஸை இங்கிலாந்தின் மிகவும் நிலையான நகரங்களில் ஒன்றாக மாற்ற உதவுவதில் உங்கள் பங்கை வகிக்கவும்.

6. **தனித்து நிற்க**: ஒரு ஈ-சரக்கு பைக் சந்தையில் ஒரு முக்கிய வேறுபாடாக இருக்கக்கூடும், மேலும் நீங்கள் ஒரு சமூக பொறுப்புள்ள வணிகம் என்பதை உங்கள் வாடிக்கையாளர்களுக்குக் காட்டுங்கள். எங்கள் அனைத்து சரக்கு

பைக்குகளையும் பெயர் இடலாம், எனவே நீங்கள் நகரத்தை சுற்றி வரும்போது சாலைகளில் உங்கள் பெயரைப் பிரபலப்படுத்தலாம்.

7.**ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான ஊழியர்கள்**: ஏற்கனவே தங்கள் விநியோக நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பைக்குகளைப் பயன்படுத்தும் வணிகர்கள், ஊழியர்கள் திறந்த வெளியில் இருப்பதற்கான வாய்ப்பை அனுபவிப்பது மட்டுமல்லாமல், திடமானவர்களாகஆரோக்கியமானவர்களாகவும் ஆகுகின்றார்கள் என்று தெரிவிக்கின்றனர். மின்கலம் உள்ளதால் ஓட்டுதலையும் மிகவும் எளிதாக்குகிறது மற்றும் சாதாரண பைக்கில் பொதுவாக சாத்தியமானதை விட இது வரம்பை மிக அதிகமாக  நீட்டிக்கிறது.

8.**உங்கள் செயல்பாடுகளில் இணைப்பது எளிது**: மின்-சரக்கு பைக்கை ஓட்டுவது எளிது. உங்கள் செயல்பாடுகளில் அவற்றை இணைப்பதன் மூலம், உங்கள் குழுக்கான கார்கள் மற்றும் வேன்களின் அவசியத்தைக்குறித்து கூட நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை, அவர்களுக்கு ஓட்டுநர் உரிமமும் தேவையில்லை. மில்டன் கீன்ஸ் கவுன்சில் அனைத்து ஓட்டுனரும் சாலைகளில் வசதியாகவும் பாதுகாப்பாகவும் உணர உதவும் பைக்கெபிலிட்டி பயிற்சியையும் வழங்குகிறது.

9.**பெட்ரோலுக்காக  இனி பயணங்கள் இல்லை**: நாள் முடிவில், மின்கலத்தை சுவரில் செருகவும், அடுத்த நாளுக்கு நீங்கள் செல்ல தயாராக உள்ளீர்கள். வேலை நேரத்தில் எரிபொருள் நிறுத்தங்களுக்கு திட்டமிட தேவையில்லை.

10. **மில்டன் கீன்ஸை விட சிறந்த இடம் எது**: இது விநியோகங்களை வழங்குவதற்கான வித்தியாசமான வழியை சோதனை செய்வதற்கான சிறந்த இடம். நகரம் ஏற்கனவே நிலையான, புதுமையான பயணங்களில் முன்னணியில் உள்ளது - அதன் குறுக்குகோடு போக்குவரத்து அமைப்பு மற்றும் ரெட்வேஸ் சாலைகள் ஆகியவற்றைக் கொண்டு சுலபமாகவும் பாதுகாப்பாகவும் உள்ளது.

## உங்கள் வணிகம் மில்டன் கீன்ஸ் முழுவதும் விநியோகிக்கிறதா?

மின்-சரக்கு பைக்கை ஏன் ஓட்டிப்பார்க்கக்கூடாது? சைக்கிள் ஓட்டுதல் குழுவை cycling@ milton-keynes.gov.uk இல் தொடர்பு கொள்ளவும் அல்லது

மேலும் தகவல்களை அறிய எங்கள் வலைத்தளமான www.getsmartertravelmk.org ஐப் பார்க்கவும்.

## ஈ-ஸ்கூட்டர்கள்

### மில்டன் கீன்ஸில் மின்சார ஸ்கூட்டர்கள்

மில்டன் கீன்ஸ் கவுன்சில் லைம், ஸ்பின் மற்றும் ஜின்ஜறுடன் இணைந்து ஒரு புதுமையான தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாக ஈ-ஸ்கூட்டர்களை சோதனை செய்தது.

மின்-ஸ்கூட்டர்களின் மில்டன் கீன்ஸ் சோதனை 12 மாதங்கள் வரை நீடிக்கும், மேலும் சோதனையின் போது 900 க்கும் அதிகமான ஸ்கூட்டர்கள் பயன்படுத்தப்படவில்லை.

மின்-ஸ்கூட்டர்களை மூன்று ஆபரேட்டர் பயன்பாடுகள் ( apps-ஆப்) மூலம் முன்பதிவு செய்யலாம், ஆப்பிள் மற்றும் கூகிள் பிளே மூலம் வழக்கமான முறையில் பதிவிறக்கம் செய்யலாம்.

எப்போது, எங்கே மற்றும்  எப்படி சவாரி செய்யலாம் என்பது பற்றி மேலும் அறிய கீழேயுள்ள FAQ's கேள்விகளைப் படிக்கவும்.

### ஈ-ஸ்கூட்டரை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் முன்பதிவு செய்வது

தொலைபேசி பயன்பாட்டின் ( apps-ஆப்) மூலம் ஸ்கூட்டர்கள் முன்பதிவு செய்ய கிடைக்கும். இவற்றை வழக்கமான இடங்களிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்.
ஸ்கூட்டரைப் பயன்படுத்துவதற்கு முன், குறுகிய- வழிமுறைகள் காணொளி மற்றும் மதிப்புரை வழிகாட்டியைப் பாருங்கள், இது அடிப்படை செயல்பாடுகளை விவரிக்கும் , மேலும் ஸ்கூட்டர்களை எப்படி, எங்கு பயன்படுத்தலாம், எங்கு நிறுத்தலாம் மற்றும் உங்கள் சவாரியை எவ்வாறு முடிக்க வேண்டும் என்பதை உங்களுக்கு காண்பிக்கும். ஸ்கூட்டர்களைப் பயன்படுத்த கட்டணம் உள்ளது, இது இயக்குபவர்களிடையே வேறுபடும்.

### நான் தலைகவசம் அணிய வேண்டுமா?

தலைகவசம் அணிவது கட்டாயமில்லை, ஆனால் அணிவது நல்லது - குறுகிய பயணங்களில் கூட. பைக்குகளில்  தலைகவசம் அணிவது

பாதிப்பை  குறைக்குமென்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன, இது ஸ்கூட்டர்களிலும்  உண்மையாக இருக்கக்கூடும்.

**ஸ்கூட்டர்கள் எவ்வளவு பாதுகாப்பானவை?**

ஸ்கூட்டர்கள் உரிமம் பெறுவதற்கு முன்னர் போக்குவரத்துத் துறையால் நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு சோதனைகளில் தேர்ச்சி பெற்றுள்ளன. இதன் பொருள் என்னவெனில் வேறு எந்த சாலை வாகனங்களுக்கும் ஒத்த வகையில் இவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு இரண்டு தடுப்புக்கருவிகள் (ப்ரேக்குகள்), ஊதப்பட்ட  ரப்பர்க் கட்டுகள் (டயர்கள்), விளக்குகள் மற்றும் ஒரு ஹாரன் / மணி இருக்க வேண்டும். அவை 35 கிலோவுக்கு மேல் எடையைக் கொண்டிருக்க முடியாது, மேலும் அவை மணிக்கு 15 மைலுக்கும் குறைவாகவே ஓட்டப்படவேண்டும். பயனர்கள் ஓட்டுநர் உரிமத்தை வைத்திருக்க வேண்டும், எனவே, நீங்கள் ஸ்கூட்டர்களை இயக்குவதற்கான மருத்துவ தகுதி, ஒரு காரை ஓட்டுவது போன்ற அதே நிலைக்கு நிறுவப்பட்டுள்ளது.

**எனக்கு எவ்வளவு வயது இருக்க வேண்டும்?**

ஆபரேட்டர்கள் தங்கள் சொந்த கொள்கைகளைக் கொண்டுள்ளனர் மற்றும் பயன்பாட்டை 18 க்கு மேல் கட்டுப்படுத்துகிறார்கள், ஆனால் சட்டப்பூர்வமாக நீங்கள் ஸ்கூட்டர்களைப் பயன்படுத்த தற்போதைய ஓட்டுநர் உரிமத்தை வைத்திருக்க போதுமான வயதாக இருக்க வேண்டும். இதில் 16 வயது முதல் தற்காலிக உரிமங்களும் அடங்கும்.

**உங்கள் வயது எவ்வாறு சரிபார்க்கப்படும்?**

திட்டத்தில் சேர பயனர்கள் பயன்பாட்டின்(App-ஆப்) வழியாக பரிசோதனைக்காக  தங்கள் புகைப்பட ஓட்டுநர் உரிமத்தை வழங்க வேண்டும்.

**ஈ- ஸ்கூட்டரை நான் எங்கே சவாரி செய்யலாம்?**

பொதுவாக, நீங்கள் எங்கு ஒரு பைக்கில் சவாரி செய்ய முடியுமோ, அங்கு ஒரு ஸ்கூட்டரிலும் சவாரி செய்யலாம். எம்.கே. சோதனை போன்ற உரிமம் பெற்ற சோதனையின் ஒரு பகுதியாக இருக்கும் வாடகை ஸ்கூட்டர்களுக்கு, இதை அனுமதிக்க இங்கிலாந்து அரசு சட்டம் இயற்றியுள்ளது.

மில்டன் கீன்ஸைப் பொறுத்தவரை இது முதன்மையாக ரெட்வே பிணையத்தைக் குறிக்கும். நீங்கள் அவற்றை சாலைகளில் சவாரி செய்யலாம், ஆனால் அவை குறுக்குகோடு சாலைகளில் இருந்து தடைசெய்யப்படும். சி.எம்.கே.யில் ஸ்கூட்டர்களை கார் நிறுத்துமிடங்கள் வழியாகவும், சுரங்கப்பாதை வழியாகவும் சேவை சாலைகளில் ஓட்ட வேண்டும். நடைபாதைகளில் ஈ-ஸ்கூட்டர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

**நியமிக்கப்பட்ட இயக்க பாதைகளில் ஸ்கூட்டர்கள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படும்.**

சைக்கிள் ஓட்டுவதைப் போல சில நேரங்களில் சரியான பாதைகளில் சவாரி செய்ய அமல்படுத்துவது கடினம். ஸ்கூட்டர்கள் மூலம் ஜியோ ஃபென்சிங்கை உபயோகிக்க  தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவோம். இதன் பொருள் ஸ்கூட்டர்கள் அனுமதிக்கப்படாத அல்லது விரும்பாத பகுதிகளுக்குச் செல்லும்போது அவற்றின் சக்தி அணைக்கப்படலாம் அல்லது குறைக்கப்படலாம். மற்ற நடவடிக்கைகள் இல்லாமல் வெற்றிகரமாக செயல்பட முடியுமா என்பதை நிறுவ, சோதனையானது இந்த திறனை சோதிக்கும், இல்லையென்றால் சாலை அடையாளம் அல்லது பகுதி கட்டுப்பாடுகள் போன்ற பிற நடவடிக்கைகளை நாங்கள் அறிமுகப்படுத்துவோம்.

**ஸ்கூட்டரை நான் எங்கே நிறுத்த முடியும்?**

பொதுவாக இரண்டு வகையான செயல்பாடுகள் உள்ளன, ‘சுதந்திர ஓட்டம்’ அல்லது பொருத்தபட்டவை. சுதந்திர  ஓட்டம் என்பது நீங்கள் ஒரு பகுதியில் ஒரு ஸ்கூட்டரில் சவாரி செய்யலாம் மற்றும் உங்கள் சவாரி முடிந்ததும் அடுத்த பயனர்களுக்காக உங்கள் ஸ்கூட்டரை நிறுத்தி விடுங்கள். இந்த செயல்முறை அதிகபட்ச இணங்கும் தன்மையை வழங்குகிறது மற்றும் ஸ்கூட்டர்களால் ஒரு வீட்டுக்கு வீடு சேவை வழங்கப்படுகிறது - இது பலருக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்கிறது. இந்த செயல்முறைக்கான  சவால் என்னவெனில் ஸ்கூட்டர்களை கிட்டத்தட்ட எங்கும் நிறுத்தக்கூடிய ஆபத்து ஏற்படக்கூடும் மற்றும் சிலரால் ‘கைவிடப்பட்டவை’ என்று பார்க்கப்பட முடியும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இது அப்படியல்ல, வழக்கமாக ஸ்கூட்டர் விட்டுச்செல்லப்பட்டவுடன் மீண்டும் அடுத்த பயணத்திற்கு கூடிய சீக்கரத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு சவாரி முடிந்ததும்

ஸ்கூட்டர்கள் இருக்கும் இடத்தை பயன்பாடு(ஆப்) உடனுக்குடன் காட்டுகிறது.

ஸ்கூட்டர்களில் மிகவும் துல்லியமான ஜி.பி.எஸ் பொருத்தப்பட்டிருக்கின்றன - எனவே ஸ்கூட்டர்கள் எல்லா நேரங்களிலும் எங்கு இருக்கின்றன என்பதை இயக்குபவர்கள் அறிவார்கள்.

வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் (பொதுவாக 24 மணிநேரம்) ஸ்கூட்டர்கள் மீண்டும் பயன்படுத்தப்படாத நிலையில், ஸ்கூட்டரை இடமாற்றம் செய்ய செயல்பாட்டுக் குழு அனுப்பப்படுகிறது.

எம்.கே.சி மற்றும் இயக்குபவர்கள் ஸ்கூட்டர்களின் உபயோகம் மற்றும் நிறுத்தம் ஆகியவற்றை உடனுக்குடன் கண்காணித்து வருகின்றனர், சோதனையின் சில வாரங்களுக்குள் உபயோகத்தின் 'மிகதேவைப்படும் இடங்கள்' (ஹாட்ஸ்பாட்கள்) எங்கே என்று தெரிந்து கொள்ளத் தொடங்குவோம், இது அதிக தேவை எங்கே என்று எங்களுக்குத் தெரிந்த இடத்தில், சில ஸ்கூட்டர் நிறுத்தும் பகுதிகளை முறைப்படுத்த வழிவகுக்கும் . இது பின்னர் சில 'பொருத்தபட்ட' (டாக்குட்) பகுதிகளாக உருவாகும், அங்கு ஸ்கூட்டர்கள் நியமிக்கப்பட்ட பகுதிகளில் பெற்றுக்கொள் (பிக் அப்) மற்றும் ஒப்படைத்தல் (டிராப் ஆஃப்) இடத்தில் நிறுத்தப்படும்.

பயனர்களுக்கு வழிகாட்டப்படும் மற்றும் ஸ்கூட்டர்கள் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு எங்கு விட்டுச் செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தப்படுவார்கள் . இதன் பொருள் ஒரு ரெட்வேயின் பக்கத்திலோ அல்லது ஒரு இடத்தின் திறந்தவெளியில் விட்டுச் செல்வது ஆகும் . வெகுமதிகள் மூலம் ஸ்கூட்டர்களை பொருத்தமான இடங்களில் விட்டுவிட பயனர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் (எடுத்துக்காட்டாக எதிர்கால சவாரிகளுக்கு குறைந்த கட்டணம்). நல்ல வகையில் ஸ்கூட்டர் நிறுத்த அடையாளம் காண உதவும் வகையில் ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ள ஸ்கூட்டரின் புகைப்படத்தை எடுக்க பயனர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இறுதியில் பயனர்கள் ஸ்கூட்டரை பொருத்தமற்ற இடங்களில் தொடர்ச்சியாக விட்டால், அவர்களை திட்டத்திலிருந்து 'தடை' செய்யலாம்.

**ஒரு சம்பவத்தை பற்றி நான் எவ்வாறு புகாரளிப்பது அல்லது சிக்கலை தெரியப்படுத்துவது?**

குறிப்பிட்ட இயக்குபவரைத் தொடர்புகொள்வதற்கு ஸ்கூட்டர்களில் தொடர்பு விவரங்கள் உள்ளன. இயக்குபவரின் வலைத்தளங்கள் மூலமாக புகாரிடலாம், மேலும் உள்ளூர் தொடர்பு விவரங்கள்;

**லைம்**

மின்னஞ்சல்: support@li.me
தொலைபேசி: +44 800 808 5223

https://www.li.me/en-us/home

**ஸ்பின்**

**https://spinpm.wpengine.com/**

**ஜின்ஜர்**

**https://www.ginger.town/**

சரியாக நிறுத்தப்படாத அல்லது நீண்ட நேரம் பயன்படுத்தப்படாமல் விட்டுவிடும் ஸ்கூட்டர்களை கையாள இயக்குபவருக்கு தரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக ஸ்கூட்டர்கள் பாதைகளைத் தடுத்துக்கொண்டிருக்கும் ஒரு சம்பவத்திற்கு 2 - 4 மணிநேரங்களுக்கு இடையில் அவர்கள்  பதிலளிக்க வேண்டும்.

**சுற்றி நிறைய ஈ-ஸ்கூட்டர்கள் உள்ளன, ஆனால் மின்கல சக்தி  ஏதும் இல்லையே?**

ஒரு சேவை வாகனம் இரவில் சென்று ஈ-ஸ்கூட்டர்களை சார்ஜ் செய்ய எடுத்துச் செல்கிறது அல்லது அவற்றின் மின்கலங்கள் (பேட்டரிகள்) மாற்றப்படுகின்றன. மின்-ஸ்கூட்டர்களின் சார்ஜ்  2-3 நாட்கள் வரை நீடிக்கும் மற்றும் அவற்றின் சார்ஜ் நிலை தொலைவிலிருந்து கண்காணிக்கப்படுகின்றன.

**ரெட்வேயின் பிற பயனர்கள் மற்றும் குறிப்பாக ஊனமுற்ற பயனர்களைப் பற்றி என்ன?**

ரெட்வேஸ் 250 கி.மீ க்கும் அதிகமான பகிரப்பட்ட-பயன்பாட்டு பாதைகளை வழங்குகிறது, பொதுவாக 2- 3 மீ அகலமுள்ள பாதைகள்

உள்ளன. இந்த ஆஸ்தியின் பயன்பாட்டை அதிகப்படுத்தும் விதமாக நடைபயிற்சி, சைக்கிள் ஓட்டுதல் மற்றும் இப்போது பரிசோதனைக் காலத்திற்கு - மின்சார ஸ்கூட்டர்கள் ஆகியவற்றை அதிகமாக ஆதரிப்பதே எங்கள் நோக்கம் ஆகும். இந்த பிணையம் பல குடியிருப்பாளர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் மிகவும் நிலையான பயணத்தை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது. இந்த வழித்தடங்களில் பெரும்பாலானவை தற்போது குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றது, எனவே எல்லா பயனர்களுக்கும் இடம் இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம். பரிசோதனை இதை உறுதிப்படுத்த உதவும் - அல்லது இல்லை என்று.

எம்.கே.யில் உள்ள ஊனமுற்ற சமூகத்தின் பிரதிநிதியுடன் நாங்கள் உரையாடுகிறோம், அவர்களின் கவலைகள் மற்றும் பிரச்சினைகளை கவனமாகக் கேட்கிறோம். காவல்துறை, பூங்காக்கள் அறக்கட்டளை, சாண்டாண்டர், சைக்கிள் மன்றம், ஆபரேட்டர்கள், எம்.கே.சி, பிசினஸ் மற்றும் எம்.கே சென்டர் ஆகியற்றின் ஒருங்கிணைந்த வாழ்க்கைக்காக நாங்கள் ஒரு பங்குதாரர் ஆலோசனைக் குழுவை ஏற்படுத்தி உள்ளோம். பரிசோதனையை மறுஆய்வு செய்வது மற்றும் பரிசீலிக்கப்பட வேண்டிய எந்தவொரு திருத்தங்கள் / நடவடிக்கைகளுக்கும் பரிந்துரை வழங்குவதே இந்த குழுவின் பங்கு ஆகும். எதிர்கால போக்குவரத்து முறையாக மின் ஸ்கூட்டர்களை அரசாங்கம் தொடர வேண்டுமா என்று ஆலோசனை வழங்குவதற்காக பரிசோதனை முடிந்ததும் அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கையை வழங்க இந்த குழு அழைக்கப்படும்.

பரிசோதனை வளர்ந்து வரும் இந்த சூழ்நிலையில் பார்வையற்றோருக்கான வழிகாட்டி நாய்களுடன் அவர்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளவும் கூட நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

**தனியார் மின்-ஸ்கூட்டர்கள் பற்றி என்ன?**

இவை பரிசோதனையின் ஒரு பகுதியாக இல்லை, தற்போது எம்.கே மற்றும் உண்மையில் இங்கிலாந்து முழுவதும் இவை பயன்படுத்தபட சட்டவிரோதமாக உள்ளன. பரிசோதனை மூலம் உரிமம் பெற்ற ஸ்கூட்டர்கள் மட்டுமே எம்.கே.யில் அனுமதிக்கப்படுகின்றன.

**கூடுதல் தகவல்களை நான் எங்கே பெற முடியும்?**

இயக்குபவரின் வலைத்தளங்கள் மேலும் விரிவான தகவல்களைத் தருகின்றன. மில்டன் கீன்ஸ் கவுன்சில் வழக்கமான புதுப்பிகளை

வெளியிடும். பரிசோதனையின் திட்டம் மற்றும் அவற்றின் பின்னால் உள்ள பகுத்தறிவு பற்றிய தகவல்களையும் போக்குவரத்துத் துறை வழங்குகிறது.

**கோவிட் -19 பற்றி என்ன?**

ஸ்கூட்டர் நிறுவனங்கள் தங்கள் வலைத்தளங்களில் கோவிடிடமிருந்து வரும் அபாயத்தைக் குறைப்பதற்கான கொள்கையை வெளியிடுகின்றன. செயல்பாடுகள் வெளியில் உள்ளன மற்றும் நிறுவனங்கள் தங்கள் ஸ்கூட்டர்களை தவறாமல் சுத்தம் செய்கின்றன, மேலும் ஒற்றை நபர் வாகனங்கள் அதிக அளவு தனிமைப்படுத்தலை வழங்குகின்றன. எல்லா செயல்களையும் போலவே, அறிகுறிகளைக் கொண்ட பயனர்கள் தற்போதைய அரசு / பொது சுகாதார இங்கிலாந்து வழிகாட்டலைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.